**பருத்திக்கு நல்ல விலை கிடைக்கும்**

*சர்வதேச பருத்தி ஆலோசனை குழு, 2020-21- ஆம் ஆண்டு உலக பருத்தி நுகர்வு 25.51 மில்லியன் டன்களாக இருக்குமென கணித்துள்ளது. இது 2019-20-ஆம் ஆண்டு நுகர்வை விட 14 சதவீதம் அதிகமாகும். அமெரிக்க வேளாண் துறையின் அறிக்கையின்படி உலக பருத்தி உற்பத்தி 24.9 மில்லியன் டன்களாக இருக்குமெனவும் இதில் சீனாவும் இந்தியாவும் இணைந்து பாதிக்கும் மேலாக பங்களிக்குமென்றும் கணித்துள்ளது. இது கடந்த நான்கு ஆண்டுகளில் இல்லாத அளவு 6.5 சதவீதம் குறைந்துள்ளது.*

*இந்திய பருத்தி கழகத்தின் படி, 2020-21 ஆம் ஆண்டு இந்தியாவில் பருத்தி நுகர்வு 330 இலட்சம் பொதிகள்(1 பொதி-170 கிலோ) என கணித்துள்ளது. இது கடந்த ஆண்டு நுகர்வை விட 33 சதவீதம் கூடுதலாகும். இந்தியாவில் 2020-21 ஆம் ஆண்டு பருத்தி உற்பத்தி 360 இலட்சம் பொதிகள் இருக்குமென கணிக்கப்பட்டுள்ளது. பருத்தி இறக்குமதியின் மீது 10 சதவீதம் வரி விதிக்கப்பட்டுள்ளதால், இந்தியாவில் பருத்தி இறக்குமதி 14 இலட்சம் பொதிகளாக குறையும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் பருத்தி ஏற்றுமதியானது 54 இலட்சம் பொதிகளாக இருக்கும் என்றும் இது முந்தைய ஆண்டை விட 8 சதவீதம் அதிகமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நூற்பாலைகள் மற்றும் வாத்தகர்களிடம் ஜனவரி 31, 2021 வரையுள்ள மொத்த இருப்பு 247.25 இலட்சம் பொதிகள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து பருத்தி, பங்களாதேஷ், சீனா, வியட்நாம், பாகிஸ்தான் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.*

*அதிக நுகர்வு காரணமாக, உலகெங்கிலும் பருத்தியின் தேவை அதிகரித்தும், இந்தியாவில் ஏற்றுமதி அதிகரித்து மற்றும் இறக்குமதி குறைந்து காணப்படுவதன் காரணமாக ஜனவரியிலிருந்து பருத்தி விலை ஏறுமுகமாக உள்ளது. பருத்தி பயிரிடும் முக்கிய மாநிலங்களில் உற்பத்தி மதிப்பீடுகள் மாறாமல் இருந்தாலும், எதிர்பாராத மழையால் பருத்தியின் தரம் குறைந்துள்ளது, இதுவே சமீபத்திய விலை உயர்வுக்கு முக்கிய காரணமாகும்.*

*தமிழ்நாட்டில் பருத்தி மாசிப்பட்டம், ஆடிப்பட்டம் மற்றும் கார்த்திகை பட்டம் ஆகிய மூன்று பருவங்களில் பயிரிடப்படுகிறது. தற்போது ஆடிப்பட்ட வரத்து குறைந்து மாசிப்பட்டம் விதைப்பு தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பருத்தியின் முக்கிய நுகர்வோராக திகிழ்கிறது. 2019-20 ஆம் ஆண்டில் 1.17 இலட்சம் எக்டரில் பருத்தி பயிரிடப்பட்டு 5 இலட்சம் பொதிகள் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் பயிரிடப்படும் முக்கிய இரகங்கள் ஆர்.சி.எச்., பி.டி பருத்தி, சுரபி மற்றும் டி.சி.எச் ஆகியவை ஆகும். பருத்தி ஆலையாளர்கள் தங்களது தேவைக்கேற்ப குஜராத், மகராஷ்டிரா, ஆந்திரா மற்றும் கர்நாடகாவிலிருந்து கொள்முதல் செய்கின்றனர்.*

*தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் , வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பட்டு திட்டத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம் கடந்த 15 ஆண்டுகளாக கொங்கனாபுரம் கூட்டுறவு விற்பனை மையத்தில் நிலவிய பருத்தி விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. பொருளாதார ஆய்வின்படி தற்போதைய சந்தை நிலவரம் தொடர்ந்தால் நல்ல தரமான பருத்தி விலை மார்ச் முதல் ஜூன் 2021 வரை குவிண்டாலுக்கு ரூ.6500 முதல் ரூ.6900 வரை இருக்குமென கணிக்கப்பட்டுள்ளது. தற்போதைய சந்தை நிலவரங்கள் தொடர்ந்தால் விலை உயர்வுக்கு நல்ல வாய்ப்புகள் இருப்பதால் விவசாயிகள் ஜூன் 2021 மாதத்தில் பருத்தியை சேமித்து விற்பனை செய்யலாம். மாசிப்பட்டத்தில் சாகுபடியை மேற்கொள்ளும் விவசாயிகள் முன்னறிவிக்கப்பட்ட விலையின் அடிப்படையில் விதைப்பு முடிவை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.*

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்*
*வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*
*கோயமுத்தூர்-641 003*
*தொலைபேசி- 0422-2431405*

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*பேராசிரியர் மற்றும் தலைவர்*
*பருத்தி துறை*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர் - 641 003.*
*தொலைபேசி எண் - 0422-2450507*

## Cotton will Fetch Better Price

The International Cotton Advisory Committee has estimated the global cotton consumption to rise about 25.51 million tonnes for 2020-21, which is 14 percent higher than 2019-20. As per USDA reports, China and India together are expected to account for more than half of the global cotton crop in 2020-21, as the world cotton production is projected at 24.9 million tonnes, 6.5 percent below 2019-20 and the lowest output in last four years.

As per the estimates of Cotton Association of India, cotton consumption in India is expected to be increased to 330 lakh bales, which is 33 per cent higher than in 2019-20. Cotton production is estimated to be 360 lakh bales (1 bale of 170 kg) in India during 2020-21. India's cotton imports are estimated to be reduced to 14 lakh bales which is 9.6 percent lesser than the previous year due to 10 percent duty levied an imports. India's cotton export is estimated at 54 lakh bales which is 8 per cent higher than 2019-20 year. The total stock held by spinning mills and stockists by the end of January 2021 is estimated at 247.25 lakh bales. India exports cotton to Bangladesh, China, Vietnam, Pakistan and Indonesia.

Increase in demand due to higher consumption estimates across the globe, increased exports from India and decline in imports to India caused the price of cotton to rule around higher side from January to till date. Even though the estimates of production remain same in the major growing States, unexpected rains affect the quality lint of which is also a major reason for the recent price hike.

The major sowing season for cotton in Tamil Nadu is Maasipattam, Aadipattam and Karthikaipattam. At present, fresh arrivals of Aadiptaam nearing completion and Maasipataam sowing is started in Tamil Nadu. Tamil Nadu, being the major consumer of cotton, the area under cotton in 2019-20 is 1.17 lakh

hectares which is 8.5 per cent lesser than the previous year and the production is five lakh bales which is six per cent lesser than the previous year. The major cotton varieties grown in Tamil Nadu are RCH, Bt cotton, Surabhi and DCH. Millers procure cotton from Gujarat, Maharashtra, Andhra Pradesh and Karnataka for their industry demand.

The Tamil Nadu -Irrigated Agriculture Modernization Project (TN- IAMP) funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University analyzed the past 14 year historical cotton prices prevailed in Konganapuram Cooperative Marketing Society and conducted market survey to facilitate farmers to take up selling and sowing decisions. As per the results of the analysis and market survey, the farm gate price of good quality cotton during March-June 2021 would be Rs.6500-6900 per quintal. Since there are good chances for price increase (if the current market sentiments continues), the farmers can store and sell the cotton during June 2021. The farmers are encouraged to take their Maasipattam sowing decision based on this market advisory.

***For details contact***

*Domestic and Export Market Intelligence Cell,*
*Centre for Agricultural and Rural Development Studies,*
*Tamil Nadu Agricultural University,*
*Coimbatore – 641 003.*
*Phone No: 0422- 2431405*

***For Technical Details please contact***

*Professor and Head,*
*Department of Cotton,*
*Tamil Nadu Agricultural University,*
*Coimbatore – 641 003.*
*Phone No: 0422-2456297*